# சமூகச் சொத்துக்களைப் பேணுதல்

(இனம் - 29)

01. தமிழ்நாடு 1994 ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 257 வது பிரிவு தெரிவிப்பதாவது : "அரசு ஒரு ஊராட்சிக்கு அல்லது இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பிற குழு எதற்கும், பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்கள் தாயரிப்பது பொறுத்த அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மற்றும் நான்காம் இணைப்புப் பட்டியலில் இடப்பட்ட 29 பொருட்கள் தொடர்பானவைகள் உள்ளடங்கலாக பொறுப்புகளை நிறைவேற்றலாம்". இந்த 29 இனங்களுள் கடைசியாக வருவது "சமூகச் சொத்துக்களைப் பேணுதல்" என்பதாகும்.

02. சமூகச் சொத்துக்களை ஊராட்சிகள் பேணுதல் தொடர்பாக ஊராட்சிகள் சட்டத்தில் பல பிரிவுகள் உள்ளன. இச்சட்டத்தின் 116 (ii) வது பிரிவின் படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்தின் சம்மதத்துடன் ஒத்துக்கொள்ளும் வரையரைகளுக்கு உட்பட்டு எந்தப் பணியின் பேணுதலையும் அதனிடம் ஒப்படைக்கலாம். சமூகச் சொத்துக்கள் மற்றும் அதனைப் பேணுதல் தொடர்பான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

## (1) சிறு பாசனம்

அரசு ஏதேனும் ஓர் பாசன வேலையினை ஏதேனும் சிற்றூராட்சிக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ ஏதேனும் ஓர் பாசன வேலையினை பாதுகாத்து பராமரிப்பதற்கும், பாசன மேலாண்மைக்கு மாற்றுவதற்கும் அல்லது நீரினை சீராகப் பகிர்ந்தளிப்பதற்கும் அதிகாரத்தினை மாற்றி வழங்கலாம். மேலும் சிற்றூராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் சில வரைபரைகளுக்கு உட்பட்டோ அல்லது கிராமத்தின் பாசன வளங்களை குடி மராமத்து செய்யவும் கட்டுப்படுத்தி செயல்படுத்தவும் மற்றும் கட்டணங்கள் விதிக்கவும் மற்றும் சில அடிப்படை நோக்கங்களுக்காவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் அமைப்புச் சட்டத்தின் 133 (1) மற்றும் (2) பிரிவுகள்)

## (2) மீன்வளம்

1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 132 ஆனது சிற்றூராட்சிக்கு மீன்வளம் குறித்து அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் விபரமாவது: "கிராமக் குடிமக்களின் பொது நன்மைக்காக நிர்வகிக்கப்படும் அல்லது பழக்கவழக்கப் படி அவர்கள் உடமையானதாக கருதப்படும், மீன்பிடிக்கும் உரிமை உள்பட, சொத்து அல்லது வருமானம் அல்லது ஊர் நிலத்தைப் பொதுவாக அனுபவிப்பவருடைய உரிமை வருமானம் அல்லது குறிப்பிட்ட நிலத்தை அனுபவிப்பருடைய உரிமை. வருமானம் அல்லது ஒரு குறிப்பிட்ட நீர்ப்பாசன ஆதாரத்தில் உள்ள நிலத்தை அனுபவிப்பவர்களுடைய உரிமை, வருமானம் ஆகிய இவைகள், அரசு அதற்கென ஒரு அறிக்கை வெளியிட்டால் ஊராட்சியை சேரும். இதனை ஊராட்சி, அதன் மக்களுக்கும் அல்லது உடமையாளர்களுக்கும் நன்மை பயக்கும் படி நிர்வகித்து வரவேண்டும்". 133 (3) வது சட்டப் பிரிவில் நீர்பாசன பராமரிப்பு வேலை சிற்றூராட்சிக்கு மாற்றப்படும் பொழுது அதில் மீன் பிடிக்கும் உரிமையும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

## (3) குடிநீர்

குறைந்தபட்ச தேவை திட்டத்தில் ஊரக குடிநீர் வழங்கல் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். தமிழ்நாடு 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 110 (ġ) பிரிவில் சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் குளிக்க மற்றும் துவைக்கும் நோக்கங்களுக்கென நீர் நிலையங்களை உருவாக்க அதிகாரம் வழங்கியுள்ளது. ஆனால் குடிநீர் வளங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் திட்டங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் இந்தக் கூறில் உள்ள எதுவும் பாசனம் அல்லாத நோக்கங்களுக்கு நீர் வழங்கு கைக்கும் கழிவு நீருக்கும் பொருந்தாது. (பிரிவு 111 மற்றும் 115). வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் திட்டங்கள் கீழ் செயல்படுத்தப்படும் ஊரக குடிநீர் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுவரையில் உள்ளாட்சி அமைப்புகள் நேரடியாக ஊரக குடிநீர் திட்டங்களை செயற்படுத்த அனுமதிக்கப்பட வில்லை. கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பினை 1982ம் ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள தொழில் நுட்ப பிரிவு கைப்பம்பு மற்றும் விசைப்பம்புகளை பராமரிப்பதற்கான தொழில் நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

### (4) சாலைகள் மற்றும் இதர வகை போக்குவரத்துகள்

சாலைகள் பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் என்பது கிராம வளர்ச்சிக்கான கட்டமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. புதிய சாலைகள் உருவாக்குவது தொடர்பாக. தற்பொழுதுள்ள நிலை என்னவெனில் தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள் மற்றும் சிறப்புச் சாலைத் திட்டங்களான கரும்பு வயல் சாலைகள், வெளிநாட்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும் சாலைத் திட்டங்கள் ஆகியவை மாநில நெடுஞ்சாலைத் துறையினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேற்கண்ட சாலைகள் யாவும் மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், இணைப்புச் சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் சாலைத் திட்டங்கள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்து செய்து வருகின்றன.

மாநிலச் சாலைகளின் நீளத்தில் 52 விழுக்காடு சாலைகள் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழ் நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளால் சாலை வசதிகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளை சிற்றூராட்சிகள் பராமரிக்க போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொறுத்தமான சட்டப் பிரிவுகள் பின்வருமாறு :

**ஊராட்சி**

(i) மேற்படி சட்டத்தின் 110–வது பிரிவு வகை முறைகளுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு தமது நிதிவரம்பிற்குள் பின்வரும் வேலைகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி தேவைக்கேற்ப நிறைவேற்றுவதற்கென நியாயமான வரை முறையைச் செய்து கொள்ள வேண்டியது.

(அ) எல்லா கிராமச் சாலைகளையும் அதாவது ஒரு கிராமத்திலுள்ள (தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகள் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர்த்து) எல்லாச் சாலைகளையும் அத்தகைய சாலைகளின் எல்லாப் பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுது பார்த்தல், பராமரித்தல்.

(ஆ) கட்டிடம் உள்ள பகுதிகளிலும் பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் தெரு விளக்குகள் அமைத்தல்.

(இ) வடிகால்களைக் கட்டுமானம் செய்தால் மற்றும் (கழிவுநீர் உள்ளிட்டதல்லாது) வடிகால் நீரையும், மாசுக்களையும் அகற்றிவிடுதல்.

(ii) சட்டப் பிரிவு 125–ல் சில பொதுச் சாலைகள் மற்றும் சில சாலைகள் தவிர்த்து அமைப்பதற்கு சிற்றூராட்சிகள் உரிமை பெற்றுள்ளன. அவ்வகைப்பாட்டினை கீழே காண்க.

கிராமத்திலுள்ள எல்லாப் பொதுச் சாலைகளும் (அரசாங்கத்தால், தேசீய நெடுஞ்சாலைகள் வழிகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது மாவட்ட நெடுஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்ற வகைப் படுத்தியுள்ளவற்றைத் தவிர்த்து) அவற்றை சேர்த்து எல்லா நடைமேடைகள், கற்கள் மற்றும் இதர தளவாடங்கள் அதன் பொருட்டு ஏற்படுத்தியுள்ள எல்லாக் கட்டுமானங்கள், தளவாடங்கள் மற்றும் இதர சாமான்களுடன் அந்த சாலைகளிலும் அவற்றின் பக்கத்திலும் அல்லது அடியில் உள்ள எல்லாப் புதை சாக்கடைகள், சாக்கடைகள், சாக்கடைக் கட்டுமானங்கள், குடைவுகள், மதகுகள் அவற்றை சார்ந்த எல்லாக் கட்டுமானங்கள், தளவாடங்கள், பொருள்களுடன், அவை ஊராட்சி செலவிலோ வேறு வகையிலோ கட்டப்பட்டிருந்தாலும் கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டவையாகும்.

**ஊராட்சி ஒன்றியம்**

சட்டத்தின் 112–வது பிரிவில், ஊராட்சி ஒன்றியத்திற்கு அதன் வரம்பிற்குள்ளான நிதியினைக் கொண்டு பொறுப்புடன் கூடிய சில வசதிகளை செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அவைகள்

ஊராட்சிகள் ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லாப் பொதுச் சாலைகள், அச்சாலைகளின் எல்லாப் பாலங்கள், சிறு பாலாங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றை கட்டுதலும், பழுது பார்த்தலும் மற்றும் பாராமரித்தலும். ஊராட்சிகள் சட்டம் 126–வது பிரிவு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொதுச் சாலைகளை தனது உரிமையாக்கிக் கொண்டு பராமரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**அரசின் சார்பாக பராமரித்தல்**

சட்டப்பிரிவு 127–ல் மாநில அரசு, சிற்றூராட்சிகள், அரசின் சார்பாக சாலைகளை கீழ் கண்டபடி பராமரித்துக் கொள்ளவும் அதன் செலவினை ஏற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. (அ) இத்தகைய சாலையின் வடிகால் அமைப்பின் நீர் வடிமானத்திற்கும், அதனை பேணுவதற்குமாக (ஆ) அத்தகைய சாலையின் ஓரத்தில் அல்லது அவற்றின் அடியில் உள்ள வடிகால்களுக்கு வழிவகை செய்வதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்குமாக. (இ) அத்தகைய சாலையுடன் சேர்ந்துள்ள நடைபாதைகளுக்கு வழிவகை செய்வதற்கும் அவற்றை பேணுவதற்கும் மற்றும் பழுது பார்ப்பதற்குமாக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

**(5) பொதுவான இடுகாடு மற்றும் சுடுகாடு**

பொது இடுகாடு மற்றும் சுடுகாட்டினை, சாதி, இனம் மற்றும் சமயப் பாகுபாடின்றி ஊராட்சிகள் பராமரித்து வரலாம் என்பதற்கு தமிழ்நாடு 1994–ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 116(1) சான்றாக அமைந்துள்ளது.

**(6) நூலகங்கள் மற்றும் படிப்பகங்கள்**

தமிழ்நாடு 1948–ம் ஆண்டு நூலகங்களின் சட்டப்படி மாநில பொது நூலகத் துறையினரால் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முக்கிய மற்றும் கிளை நூலகங்களை, அந்தந்த எல்லைக்குள் ஏற்படுத்தி பராமரிப்பது உள்ளூர் நூலக அதிகாரிகளின் பொறுப்பாகும். இருப்பினும், தமிழ்நாடு 1994–ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் 111 (ழ) – பிரிவு சிற்றூராட்சிகள் மூலம் படிப்பகங்களை ஏற்படுத்தி அவற்றினை நடத்தி வருவதற்கும் வழி வகை செய்துள்ளது.

**(7) பள்ளிக் கட்டிடங்கள்**

ஊராட்சிச் சட்டப் பிரிவு 108–ன் படி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள் அரசுப் பணியாளர்களாவார்கள். 112–வது சட்டப் பிரிவின்படி தொடக்க பள்ளிகளை புதியதாக தொடங்கவும், பேணவும், விரிவாக்கவும், மேம்படுத்தவும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மான்யம் வழங்குவது உட்பட அனைத்துப் பணிகளையும் ஊராட்சிகளிடம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் முதன்மை மற்றும் தொடக்கப் பள்ளிகளை பராமரித்து பேணுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளன.

**(8) சுகாதாரம், துப்புரவு மற்றும் குடும்ப நலன்**

மக்கள் நலன் பேணும் பணியில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. மருந்தகங்கள் ஏற்படுத்தல் அவற்றைப் பராமரித்தல் கிராம மருத்துவத் தொழில் புரிவோருக்கு உதவித்தொகை அளித்தல், மேலும் தாய்–சேய் நலவிடுதிகள் ஏற்படுத்தி நடத்துதல், "தாய்" சேவைப் பணி நடத்துதல், குடும்ப கட்டுப்பாடு திட்டத்தில் தாய்மார்களுக்கு அறிவுரையும் உதவியும் அளித்தல் தொடர்பான பணிகளுக்கு சட்டப் பிரிவு 112 மற்றும் 118 வழி வகுத்துள்ளன.

**(9) காடுகள்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 120வது பிரிவின் படி அந்தந்த கிராமத்திலுள்ள ஒதுக்கப்படாத எல்லாக் காடுகளும் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அத்தகைய கிராமத்தின் நன்மைக்காக அதனால் பரிபாலிக்கப்படவும் வேண்டும்.

**(10) புறம்போக்கு நிலங்கள்**

பிரிவு 134ன் படி புறம்போக்கு நிலங்களான முறையே மேய்ச்சல் நிலங்கள், கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள், கால் நடைத் தொழுவங்கள், வண்டிப் பேட்டைகள், தோப்புகள் ஊராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்புறம் போக்கு நிலங்களை ஒழுங்கு செய்யும் அதிகாரமும் ஊராட்சிக்கு உண்டு. இவ்வாறாக இத்தகைய சமூகச் சொத்துக்களை பேணும் அதிகாரங்களை ஊராட்சிகள் பெற்றுள்ளன.

**(11) பொதுச் சந்தைகள்**

பொது மக்களின் உபயோகத்திற்காக பொதுச் சந்தைகளை உள்ளாட்சி அமைப்புகள் நிர்வகிக்கலாம். அத்தகைய பொதுச் சந்தைகளில் உள்ள கடைகள், வண்டி நிறுத்துமிடங்களுக்கான கட்டணத்தை சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் வசூல் செய்யலாம்.

**(12) வர்த்தகச் சொத்துகள்**

மேலே குறிப்பிட்டுள்ள சமூகச் சொத்துக்கள் தவிர அறக்கட்டளை/வர்த்தகச் சொத்துக்களான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், பொருட்காட்சிகள் நடத்தும் இடங்கள், பொதுச் சந்தைக்கான இடங்கள் ஆகியவற்றை பராமரிக்கவும், மேம்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உள்ளன. இக்கட்டிடங் களுக்கான வாடகை, தீர்வை, உபயோகிப்பாளர் கட்டணம் ஆகியவற்றை உள்ளாட்சி அமைப்புகள் நிர்ணயம் செய்ய வேண்டும். இக்கட்டிடங்களின் விற்பனை, குத்தகை மற்றும் சொத்து பரிமாற்றம் தொடர்பான பணிகளையும் உள்ளாட்சி அமைப்புகள் கவனிக்க வேண்டும்.

**(13) ஏனைய பொதுச் சொத்துக்களைப் பேணுதல்**

சில அடிப்படை வசதிகளையும், சொத்துகளையும் உள்ளாட்சி அமைப்புகள் பேணிப்பராமரிப்பதற்கு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 110 வழி செய்கிறது. உள்ளாட்சி அமைப்புகளால் பேணப்பட்டு வரும் பிற சொத்துக்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) கிராமச் சாலைகள், அச்சாலைகளிலுள்ள எல்லாப் பாலங்கள், சிறுபாலங்கள், சாலை அணைகள், தரைப்பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதலும், பழுது பார்த்தலும், பேணுதலும்.

(2) பொதுச் சாலைகளுக்கும், கட்டிடங்கள் இருக்கும் பகுதிகளுக்கு அப்பால் உள்ள பொதுவிடங்களுக்கும் விளக்குகள் அமைத்தல்.

(3) வடிகால்களைப் பராமரித்தல், வடிகால் நீரையும், மாசுக்களையும் அகற்றிவிடுதல்.

(4) பொதுக் கழிப்பிடங்களை துப்புரவாக்க ஏற்பாடுகள் செய்தல்.

(5) குளங்கள், குட்டைகள், நீர்வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றைப் பராமரித்து குளிக்க, துவைக்க தேவையான நீரை வழங்க ஏற்பாடு செய்தல்.

(6) பொதுச் சந்தைகளைப் பேணுதல்.

(7) பொதுமக்களுக்கான இறங்குமிடங்களையும், நிற்குமிடங்களையும், வண்டி நிலையங்களையும், பொது கால்நடை தொழுவங்களையும் பேணுதல்.

(8) பொது இறைச்சிக் கொட்டகைகளைப் பேணுதல்.

(9) வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிக் கருவிகளும், விளையாட்டு வெளிகளும், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், பொருட்காட்சி நடத்தும் இடங்கள் ஆகியவற்றைப் பேணுதல்.

(10) எழுத்தறிவிக்கும் நிலையங்கள், சமூகக் கல்வி புகுட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிலையங்களைப் பேணுதல்.

(11) ஏழை விடுதிகள், அனாதை இல்லங்கள், சாவடிகள், கால்நடை நிவாரண நிலையங்கள் பேணுதல்.

(12) பேருந்து நிலையங்கள், வண்டிகள் நிறுத்துமிடங்கள், காலியிடங்கள் பேணுதல்.

(13) தச்சுப்பட்டறை, கொல்லுப்பட்டறை பேணுதல்.

(14) சாலை ஓரங்களிலுள்ள நிழல் தரும் மரங்களைப் பேணிப் பாதுகாத்தல்.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்பட்டு வரும் சமூக சொத்துக்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1-4-91 அன்று உள்ளாட்சி அமைப்புகளால் பேணப்பட்டு வரும் சமூகச் சொத்துகள்

| வ.எண். | சமூகச் சொத்து விவரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | **I. குடிநீர் வசதி** | | |
| 1. | மேல்நிலைத் தொட்டிகள் | 21,502 | |
| 2. | கைப்பம்புகள் | 1,06,091 | |
| 3. | விசைப்பம்புகள் | 18,842 | |
| 4. | குடிநீர் கிணறுகள் | 7,327 | |
| 5. | மற்றவை | 118,507 | |
| | **II. சாலை விவரங்கள்** | | |
| | **(அ) ஊராட்சியின் பொறுப்பில் உள்ளவை** | | |
| | | **எண்ணிக்கை** | **நீளம் (கி.மீ)** |
| 1. | தார்சாலைகள் | 3,486 | 4112.14 |
| 2. | மெட்டல் சாலை – ஓரடுக்கு | 11,628 | 14,058,27 |
| 3. | மெட்டல் சாலைகள் – ஈரடுக்கு | 3113 | 3887.61 |
| 4. | முரம்பு சாலைகள் | 17,706 | 19,298.48 |
| 5. | இணைப்பு சாலைகள் | 6593 | 8198.88 |
| 6. | சுடுகாடு, இடுகாடு சாலைகள் | 10,199 | 7579.95 |
| | **(ஆ) ஊராட்சி ஒன்றியம் பொறுப்பில் உள்ளவை** | | |
| 1. | சிமிண்ட் சாலைகள் | 122 | 183.72 |
| 2. | தார் சாலைகள் | 2099 | 3618.09 |
| 3. | மெட்டல் சாலைகள் (ஓரடுக்கு) | 8118 | 14,154.40 |
| 4. | மெட்டல் சாலைகள் (ஈரடுக்கு) | 2599 | 4397.67 |
| 5. | முரம்பு சாலைகள் | 4926 | 8209.52 |

| வ.எண். | சமூகச் சொத்து விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **III. கட்டிடங்கள்** | |
| | | **எண்ணிக்கை** |
| 1. | தொகுப்பு வீடுகள் | 351,862 |
| 2. | பள்ளிக்கட்டிடங்கள் | 31,057 |
| 3. | ஊராட்சி மன்ற கட்டிடம் | 8,352 |
| 4. | சமுதாயக் கூடம் | 11,974 |
| 5. | மருத்துவமனை கட்டிடம் | 1,717 |
| 6. | பேருந்து நிழற்குடை | 5,531 |
| 7. | சிறுபாலங்கள் | 38,236 |
| | **IV. மருத்துவம் மற்றும் சுகாதாரம்** | |
| 1. | ஆரம்ப சுகாதார நிலையம் | 1,160 |
| 2. | துணை சுகாதார நிலையம் | 1,773 |
| 3. | மகப்பேறு குழந்தை நலநிலையம் | 3,200 |
| 4. | கழிப்பறைகள் | 10,191 |
| | **V. கால்நடை பராமரிப்பு** | |
| 1. | கால்நடை மருந்தகங்கள் | 953 |
| 2. | கால்நடை துணைநிலையங்கள் | 1,494 |
| 3. | வழிகாட்டும் கிராம நிலையங்கள் | 206 |
| 4. | மீன்குஞ்சு நிலையங்கள் | 168 |
| | **VI. வருவாய் தரும் சொத்து விவரம்** | |
| 1. | திருமண மண்டபம் | 188 |
| 2. | அங்காடிகள் | 1166 |
| 3. | பேருந்து நிலையம் | 494 |
| 4. | இறைச்சி தொட்டிகள் | 374 |
| 5. | ஊராட்சி ஒன்றிய தச்சுப்பட்டறை | 121 |
| 6. | ஊராட்சி ஒன்றிய கொல்லுப்பட்டறை | 77 |
| | **VII. எரிசக்தி வளங்கள்** | |
| 1. | கரிமவாயு கலன்கள் | 76,536 |
| 2. | சூளா அடுப்புகள் | 352,359 |
| 3. | சூரிய அடுப்புகள் | 523 |
| 4. | காற்றாலைகள் | 247 |

| வ.எண். | சமூகச் சொத்து விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **VIII. சமூகக் காடுகள்** | |
| | | பரப்பு (ஹெக்டேரில்) |
| 1. | சமூகக் காடுகள் | 18,656.81 |
| 2. | பழக்கன்று நடும் திட்டம் | 1689.97 |
| 3. | வேளாண் காடுகள் | 1224.25 |
| 4. | விறகிற்காக மரம் நடும் திட்டம் | 4288.31 |
| | **IX. சத்துணவு மையங்கள்** | |
| | | **எண்ணிக்கை** |
| 1. | சத்துணவு மையங்கள் | 18,767 |
| 2. | சத்துணவு மையங்களுக்கான குடிதண்ணீர் வசதி | 18,527 |
| 3. | சமையல் பாத்திரங்கள் | 24,485 |
| | **X. சிறுபாசனம்** | |
| 1. | ஜீவன் தாரா கிணறுகள் | 6,987 |
| 2. | சிறுபாசன குளங்கள் | 11,429 |
| 3. | உபயோகத்தில் உள்ள பாசனக் கிணறுகள் | 3,808 |
| 4. | கசிவு நீர் குட்டைகள் | 4,750 |
| 5. | சீர் செய்யப்பட்ட நீர்வரத்து கால்வாய்கள் | 2,710 |
| | **XI. தெரு விளக்குகள்** | |
| 1. | மின்வசதிகள் | 13,207 |
| 2. | குமிழ் விளக்குகள் | 44,561 |
| 3. | குழல் விளக்குகள் | 853,463 |
| 4. | சோடியம் விளக்குகள் | 8,763 |
| 5. | ஆதி திராவிட தொகுப்பு வீடுகளுக்கும், குடிசைகளுக்கும் மின் விளக்குகள் | 245,037 |

மேலே உள்ள தகவல்கள் தமிழ்நாடு அரசு, ஊரக வளர்ச்சி இயக்ககம் தயாரித்துள்ள "தமிழக ஊரகப் பகுதி அடிப்படை வசதிகள்" கையேட்டிலிருந்து எடுக்கப்பட்டன.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளையும் கருத்தில் கொண்டு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு சமூகச் சொத்துக்கள் பேணுதல் தொடர்பான கீழ்க்கண்ட அதிகாரங்கள் மற்றும் பணிகள் வழங்க மாநில திட்டக் குழுப்பிரிவு பரிந்துரை செய்கிறது.

## I ஊராட்சி

| நடவடிக்கை (1) | | அதிகார ஒப்படைப்பு (2) | |
|---|---|---|---|
| 1. | சமூகச் சொத்துக்களை தெரிவு செய்தல் | (அ) | சிற்றூராட்சியின் ஆளுகையில் உள்ள பல்வேறு சமூகச் சொத்துக்களை தெரிவு செய்து பதிவு செய்தல். |
| | | (ஆ) | சிற்றூராட்சி சொத்துக்கள் பேணுதலுக்காக அவற்றை மதிப்பீடு செய்துபோதுமான நிதி ஒதுக்கீடு செய்தல். |
| | | (இ) | சிற்றூராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள் இவற்றைப் பேணிப் பராமரித்து பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாகச் செயற்படுத்தல். |
| | | (ஈ) | வணிக மற்றும் பிற சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகிப் போர் கட்டணம் நிர்ணயித்தல். |
| | | (உ) | சிற்றூராட்சியின் சொத்துக்களை விற்க, குத்தகைக்குவிட, மாறுதல் செய்ய உரிமை. |
| | | (ஊ) | வரி, வாடகை, உபயோகிப்பவர் தீர்வை வசூலித்தல். |
| | | (எ) | சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தல், ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான தண்டனை வழங்குதல். |
| | | (ஏ) | சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும், நன்கொடை களையும் பெறுதல். |

## II ஊராட்சி

| நடவடிக்கை (1) | | அதிகார ஒப்படைப்பு (2) | |
|---|---|---|---|
| 1. | சமூகச் சொத்துக்கள் மேம்பாடு மற்றும் பேணுதல். | (அ) | மாவட்ட ஊராட்சியின் சொத்துக்களை பராமரிக்க வேண்டி அவற்றைமதிப்பீடு செய்து தேவையான நிதி வழங்க ஏற்பாடு செய்தல். |
| | | (ஆ) | ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள், இவைகளைப் பேணிப் பராமரித்து, பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாக செயற்படுத்தல். |
| | | (இ) | வணிக மற்றும் பிற சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகி போர் கட்டணம் நிர்ணயித்தல். |

| (1) | (2) |
|---|---|
| | (ஈ) ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான சொத்துக்களை விற்க, குத்தகைக்கு விட, மாறுதல் செய்ய உரிமை. |
| | (உ) வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் வசூலித்தல். |
| | (ஊ) சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தல், ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல். அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான தண்டனை வழங்கல். |
| | (எ) சமூக சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும், நன்கொடை களையும் பெறுதல். |

## III மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை<br>(1) | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|
| 1. சமூகச் சொத்துக்கள் மேம்பாடு மற்றும் பேணுதல் | (அ) மாவட்ட ஊராட்சி சொத்துக்களைப் பராமரிக்க வேண்டி அவற்றை மதிப்பீடு செய்து தேவையான நிதி வழங்க ஏற்பாடு செய்தல். |
| | (ஆ) மாவட்ட ஊராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம், பொருட்காட்சி இடம், சந்தைகள் இவற்றைப் பேணிப் பாதுகாக்க தேவையான மானியம் உருவாக்கி செம்மையாக செயற்படுத்தல். |
| | (இ) வணிக மற்றும் இதர சொத்துக் களுக்கான வரி, வாடகை, உபயோகிப் போர் கட்டணம் நிர்ணயித்தல். |
| | (ஈ) சொத்துக்கள் விற்பனை, குத்தகை மாறுதல் செய்வதற்கான உரிமை. |
| | (உ) வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் வசூலித்தல். |
| | (ஊ) சொத்துக்களை தவறாகப் பயன் படுத்தல், ஆக்கிரமிப்பு, இழப்பீடு ஏற்படாமல் விழிப்புடன் இருத்தல். |
| | (எ) மாவட்ட ஊராட்சியின் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், நன் கொடைகள் பெறுதல். |
| | (ஏ) சமூக சொத்துக்களான சத்துணவு மையங்கள், பூங்காகள், போக்குவரத்து திடல்கள் ஆகியவற்றை நிறுவி பராமரிக்க தொண்டு நிறுவனங் களையும், நிதி நிறுவனங்களையும் ஈடுபடுத்தல். |

**நிதிச்சிக்கல்கள்**

04. உள்ளாட்சி அமைப்புகளான சிற்றூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் மாவட்ட ஊராட்சிகளும் மக்கள் நலன் கருதி கட்டாயம் மற்றும் விருப்பத்திற்குட்பட்டும் செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளன என்பதனை அறிந்தோம். அவ்வாறான கடமைகளைச் செய்யும் போது ஏராளமான சமூக சொத்துக்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. இப்பணிகளை செய்வதற்காகவும் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும். உள்ளாட்சி அமைப்புகள் அரசிடமிருந்து மானியம் பெறுகின்றன. அரசு மானியம் மட்டுமல்லாது சொந்தவரி விதிப்பின் மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

அரசு வழங்கும் மானியம் மற்றும் ஊராட்சி சட்டத்தில் அதற்கான விதிமுறைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | மானியத்தின் பெயர் | ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு எண். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | உள்ளூர்தீர்வை | த.நா.ஊ. சட்டம் 167வது பிரிவு |
| 2. | உள்ளூர்தீர்வை மேல்வரி | – do – 168 |
| 3. | சொத்துரிமை மாற்றத்தின் மீது தீர்வை | – do – 175 |
| 4. | கேளிக்கை வரி | த.நா.உள்ளாட்சி நிதி சட்டம், 1961<br>தமிழ்நாடு சட்டம் 62/1961 |
| 5. | கிராம வீட்டு வரி | த.நா.ஊராட்சி சட்டப் பிரிவுகள் 171 & 172 |
| 6. | சிறு உள்ளூர் வருமானம் (சந்தை கட்டணம், உரிமம், தொழில் வரி, வாகன வரி, மீன் குத்தகை) | |
| 7. | உள்ளூர்தீர்வை மேல்வரி நிகர் மானியம் | – do – 168 & 180 |
| 8. | உள்ளூர் சாலை மானியம் | – do – 182 |
| 9. | கிராம வீட்டுவரி நிகர் மானியம் | – do – 183 |
| 10. | சமூகக் கல்வி மானியம் | நிகரில்லா மானியம் |
| 11. | பெண்கள் & குழந்தைகள் மானியம் | |
| 12. | கிராமபணி மானியம் | |
| | (அ) குடிநீர் | |
| | (ஆ) இணைப்புச் சாலைகள் | |
| | (இ) பள்ளிக்கட்டிடம் | |
| 13. | உள்ளூர் பாசன மானியம் | |
| 14. | கால் நடை பராமரிப்பு மானியம் | |
| 15. | தாய் சேய் நிலையங்களை பேணுவதற்கான மானியம் | |
| 16. | மருந்தகங்கள் பராமரிப்பு மானியம் | அரசாணை எண்.51 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் :7–1–77 & 1168 சு. & கு.ந. துறை, நாள் : 15–7–83. |

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலமைகளை ஆய்வு செய்யும் போது பெரும் பாலானவற்றின் நிதிநிலமை மிகவும் மோசமாக உள்ளது என்பது தெரியவரும். போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்களும், பிற திட்ட உதவிகளின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாறுதல் செய்யப்பட்ட சொத்துக்களும் போதிய பராமரிப்பின்றி செயலிழந்த நிலையில் உள்ளன. இத்தகைய சொத்துக்கள் அவசியம் நல்ல முறையில் பேணப்பட வேண்டும். மேலும் பராமரிப்பு மானியங்கள் அரசின் விருப்பம் போல் தான் கொடுக்கப்படும். கட்டாயமாகவும் கேட்டுப் பெறமுடியாத நிலை. இந்நிலைகளை கருத்தில் கொண்டு சமூகச் சொத்துக்களைப் பராமரிக்க வழங்கப்படும் மானியங்களை அதிகரிக்க வேண்டும் என்று மாநில திட்டக்குழுப் பிரிவு பரிந்துரை செய்கிறது. சமூக சொத்துக்களை சரி செய்யவும் நல்ல விதமாக பராமரிக்கவும் ஒரு குறிப்பிட்ட தொகையினை வழங்கலாம் என்றும் பரிந்துரை செய்கிறது. மேலும், வரிவிதிப்பின் மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். புதிதாக சமூக சொத்துக்களை உருவாக்குவதிலும் ஏற்கனவே உள்ள சொத்துக்களான பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், போக்குவரத்து தீவுகள் போன்றவற்றை நல்ல முறையில் பேணி பாதுகாத்து பராமரிக்கவும் தொண்டு நிறுவனங்களையும் நிதி மற்றும் வங்கி நிறுவனங்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

## நிர்வாகம் மற்றும் சட்டம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள்

05. (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை மூலம் உருவாக்கப்படும் சொத்துக்கள் போதுமான குடி தண்ணீர் வசதி, மின்சாரம், சாலை வசதிகள் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அச் சொத்துக்கள் பொது மக்களின் உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்கும். இவ்வாறாக உருவாக்கப்படும் சொத்துக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருங்கால பேணுதலுக்காக மாற்றப்பட வேண்டும்.

(ஆ) சொத்தக்களை உருவாக்கும் போது உள்ளாட்சி அமைப்புகளின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். தனியார் இடமாக இருந்தால் நில உரிமையாளரிடமிருந்து நன்கொடைப் பத்திரம் எழுதி வாங்க வேண்டும்.

(இ) மக்களது ஈடுபாட்டினை ஏற்படுத்தும் பொருட்டும் உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தை பெருக்குவதற்காகவும் பொது சொத்துக்கள் போன்ற சமுதாயக் கூடம், திருமணமண்டபம் போன்றவற்றை உபயோகிக்கம் போது குறைந்த அளவு வாடகை வசூல் செய்யலாம்.

(ஈ) சொத்துக்கள் உருவாக்க, உபயோகிக்க, பராமரிக்க உபயோகிப்பாளர் குழுக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(உ) சமூக சொத்துக்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கான ஒரு எழுச்சியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேணடும். அத்துடன் பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ, சேதப்படுத்தவோ இழப்பு ஏற்படுத்தவோ இல்லாத வகையில் கண்காணிக்க வேண்டும்.

(ஊ) சொத்து உருவாக்கும் பதிவேடுகள் எல்லா நிலையிலும் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அலுவலர்கள் ஆய்வு செய்யும் போது சொத்துக்கள் பராமரிப்பு பதிவேடுகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

(எ) சிறப்புத் திட்டங்களான மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களும் சமூக சொத்துக்களாக கருதி உள்ளாடசி அமைப்புகளிடம் ஒப்படைத்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.